செய்தி வெளியீடு எண். 34 நாள்: 18.01.2018

**மாவட்ட அளவிலான பள்ளி கலைத்திருவிழா (கலையருவி) மாணவர்களுக்கிடையேயான போட்டி நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து மாணவர்களின் நடனத்தை கண்டு மகிழ்ந்தார்**

திருவள்ளூர் சி.எஸ்.ஐ. கௌடி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பள்ளி கல்வித்துறை சார்பாக நடைபெற்ற தமிழக பள்ளி கலைத்திருவிழா (கலையருவி) மாணவர்களுக்கிடையேயான போட்டியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து மாணவர்களின் நடனத்தை கண்டு மகிழ்ந்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது :

தமிழக பள்ளிக்கலைத்திருவிழா நூற்றுக்கும் மேற்பட்ட கலை வடிவங்களில் மொழியாற்றல், பாரம்பரியம், செவ்வியல், நவீனம், ஆன்மீகம், கலாச்சாரம், கிராமியம் நாட்டுப்புறம் ஆகிய பல்வேறு பிரிவுகளில் முதல் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலக்கூடிய மாணவர்களிடையே அவர்தம் தனித் திறனையும், குழுத்திறனையும் வளர்த்துக்கொள்வதற்கான போட்டிகளைத் தொடக்க நிலை, நடுநிலை, மேல்நிலைப் பள்ளிகள் என நான்கு பிரிவில் நடத்தி அவற்றில் முதலிடம் பெறுவோர்க்கு ஒன்றியம், கல்வி மாவட்டம், மாவட்டம், மாநிலம் ஆகிய அடுத்தடுத்த நிலைகளில் தரமுடன் கூடிய திறனை வெளிப்படுத்துவோருக்கு அங்கீகாரமும், பாராட்டும், பரிசும் தமிழக அரசால் வழங்கப்படவுள்ளது.

முதலாவதாக பள்ளி அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு கல்வி மாவட்ட அளவிலான போட்டிகள் திருவள்ளூர் கல்வி மாவட்ட அளவில் மணவாள நகர், கிரைஸ்ட் கிங் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர், டி.ஆர்.பி.சி.சி.சி. இந்து மேல்நிலைப் பள்ளி, காக்களூர், கலவல கண்ணன் செட்டி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும், பொன்னேரி கல்வி மாவட்ட அளவில் ஆவடி, சத்தியமூர்த்தி நகர், அரசு மேல்நிலைப் பள்ளியிலும், புதுார், அம்பத்தூர் சேதுபாஸ்கரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும், திருமுல்லைவாயில், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும் நடைபெற்றது.

பொன்னேரி கல்வி மாவட்டத்தில் 2,809 மாணவர்களும், திருவள்ளூர் கல்வி மாவட்டத்தில் 1,778 மாணவர்களும் ஆக மொத்தம் 4,587 மாணவர்கள் போட்டிகளில் பங்குபெற்று வெற்றிபெற்ற மாணவர்கள் திருவள்ளூர், சி.எஸ்.ஐ.கௌடி மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட அளவிலான கலைத் திருவிழாவில் பொன்னேரி கல்வி மாவட்டத்தில் 69 பள்ளிகளில் 308 மாணவர்கள்ளும், திருவள்ளூர் கல்வி மாவட்டத்தில் 52 பள்ளிகளில் 256 மாணவர்களும் ஆக மொத்தம் 121 பள்ளிகளில் 564 மாணவர்கள் போட்டிகளில் பங்கேற்கிறார்கள் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.த.இராஜேந்திரன், மாவட்ட கல்வி அலுவலர் திரு.நீ. குமாரசுவாமி, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கெ.ரா.திவ்யஸ்ரீ, திருவள்ளூர் வட்டாட்சியர் திரு.தமிழ்செல்வன், பள்ளி துணை ஆய்வாளர் திரு.இராமமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**